DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 26/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமகிருஷ்ணன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 29.10.2025

முதல் விசாரணை

1. நான் தற்போது தளி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் அமராவதி நகர் காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்த போது கடந்த 20.06.2020 ம் தேதி நானும் உதவி ஆய்வாளர் சரவணக்குமார் மற்றும் காவலர் 625 சுரேஷ் ஆகியோர் குற்றத்தடுப்பு மற்றும் மணல் திருட்டு தடுக்கும் நடவடிக்கை சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்த போது பூலவாடி புது நகர், நாவல் ஓடை அமராவதி ஆற்று படுகை ஆகிய பகுதியில் கண்காணித்து கொண்டு போன போது கல்லாபுரம் அமராவதி நகர் பகுதியில் மாலை 15.15 மணிக்கு கண்காணித்த போது ஒரு நபர் தனது டிவிஎஸ் 50 வாகனத்தில் இரண்டு மணல் மூட்டைகளை கொண்டு வந்தவர் எங்களை கண்டதும் தப்பித்து ஓடி முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது மாரிமுத்து த/பெ. முருகேசன் என்பவர் என்றும் கல்லாபுரத்தை சேர்ந்தவர் என்றும் மேலும் அமராவதி நகர் ஆற்று மணலை திருடி செல்வதகா ஒப்புக் கொண்டவரை உதவி ஆய்வாளர் 17.30 மணிக்கு கைது

செய்தார்.

2. பின்னர் 17.45 மணிக்கு மேற்படி எதிரி திருடி வைத்திருந்த 2 மணல் மூட்டைகள் மற்றும் TN 41 E 1254 TVS 50 வாகனத்தையும் கைப்பற்றுதர் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதில் நானும் காவலர் 625 சுரேஷ் ஆகியோரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துகளுடன் நிலையம் ஆஜராகினோம். பின்னர் உதவி ஆய்வாளர் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம்.
3. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இரு சக்கர வாகனம் மற்றும் மணல் மூட்டைகள் தான் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. அந்த புகைப்படம் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.